# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.18/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.9 |
| Name : | வினோத்கண்ணன் |
| Father's/Husband Name: | செல்வம் |
| Village : | பெரம்பலூர் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 41/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.09.2024.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. M.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி மணிகண்டன் @ மணி ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது பெரம்பலூர் மாவட்ட மதுவிலக்கு அமலாக்க பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த வருகிறேன். கடந்த 21.05.2022–ம் தேதி அரும்பாவூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.விமல்குமார் நிலைய பொறுப்பு பணியில் இருந்தபோது அன்று காலை 08.30 மணிக்கு பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வெங்கனூர் கிராமத்தை சேர்ந்த சின்னசாமி மகன் கலியமூர்த்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில் அரும்பாவூர் காவல் நிலைய கு.எண்.112/2022 இதச பிரிவு 379–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் கட்ட புலன் விசாரணை முடித்து தொடர் விசாரணைக்காக இவ்வழக்கு கோப்பினை எனது பார்வைக்கு வைத்தார். நான் தொடர்விசாரணைக்க எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் முதல்விசாரணை அதிகாரி திரு.விமல்குமாரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் மற்ற சாட்சிகளை நான் விசாரித்ததில் அவர்கள்

முதல்விசாரணை அதிகாரியிடம் கூறிய சங்கதிகளையே என்னிடம் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. வழக்கு சொத்தினை நீதிமன்றத்தில் ஒப்படைத்து 25.07.2022–ம் தேதி இவ்வழக்கில் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச பிரிவு 379–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) அ.சா.1–கலியமூர்த்தி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் வண்டியின் நிறத்தை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சாட்சிகளை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரித்தேன். சாட்சிகள் முதல்கட்ட புலன் விசாரணை செய்த புலன்அதிகாரியிடம் கூறிய சங்கதிகளையே என்னிடம் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. சம்பவம் இடம் சென்று நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1–கலியமூர்த்திக்கு எதிரி தான் வண்டியை திருடினார் என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரி தான் வண்டியை திருடி சென்றார் என்று பிறரை கேடடு தான் தெரிந்துகொண்டார் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகே ATM சென்டர்கள் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அங்கிருந்து குற்றசம்பவம் தொடர்பாக ஏதேனும் CCTV கேமரா பதிவுகளை பெற்றேனா என்றால் இல்லை.

ii) எதிரியை அ.சா.1 பிடித்ததாக சொல்லப்படும் சாலையில் எந்த இடத்தில் எதிரியை பிடித்தார் என்று அ.சா.ஆ.5 –பார்வை மகஜரிலோ , சாட்சிகளின் வாக்குமூலங்களிலோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 1ம் வழி பாதை என்று மட்டும் குறிப்பிட்டு கூறியுள்ளார். அ.சா.1–ற்கும் எதிரிக்கும் ஏற்கனவே இருந்த முன்பகை காரணமாக அ.சா.1 அளிதத பொய்யான புகாரின் பேரில் முறையாக புலன்விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை